செய்தி வெளியீடு எண்: 873 நாள்: 18.10.2008

<u>பத்திரிக்கை குறிப்பு</u>

இந்தியா முழுவதும் பணிபுரியும் கோ—ஆப்டெக்ஸ் நிறுவன பணியாளர்களுக்கு தீபாவளி போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணை

—

தமிழக அரசின் நிறுவனமான கோ—ஆப்டெக்ஸில் இந்தியா முழுவதும் பணியாற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் 2007—2008 ஆம் ஆண்டிற்கு தீபாவளி போனஸ் 8.33 சதவீதம் மற்றும் 1.67 சதவீதம் கருணைத் தொகையாகவும், உச்சவரம்பாக ரூ.4,200/— ஐ வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இந்த அரசாணைப்படி கோ—ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் பணிபுரியும் 1009 பணியாளர்களுக்கு ரூ.42.38 இலட்சம் போனஸ் மற்றும் கருணைத் தொகை உடனடியாக வழங்கப்படுகிறது.

மேலாண்மை இயக்குநர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9